بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *09/05/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

- **போர்களையும் படையெடுப்புகளையும் முன்னிறுத்தி மாநபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்**
- **தற்போதைய போர் குறித்து துஆக்கள் செய்யுமாறு வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

மூத்தா போர் பற்றிய மேலும் விவரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: மூத்தா நாளன்று எனது கையில் 9 வாள்கள் உடைந்தன. ஏமன் நாட்டின் ஒரு தடித்த வாள் மட்டுமே எனது கையில் நின்றது. இந்த அறிவிப்பிலிருந்து, முஸ்லிம்கள் இணைவைப்பாளர்களை பெருமளவில் கொன்றார்கள் என்பது தெரியவருகிறது. இல்லையெனில், அவர்களால் இணைவைப்பாளர்களிடமிருந்து தப்பியிருக்க முடியாது. முஸ்லிம்களின் எண்ணிக்கை மூவாயிரமாகவும், அதே வேளையில், இணைவைப்பாளர்களின் எண்ணிக்கை 2 லட்சத்துக்கும் அதிகமாகவும் இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எவை சிரமமான விவகாரங்களாக இருக்கின்றனவோ, அவற்றை மக்கள் சிலர் புரிகிறார்கள். சிலர் புரிவதில்லை. தெரிந்தவர்களான மற்ற மக்கள் அவர்களுக்கு அந்த விவகாரங்களைப் புரிய வைக்க வேண்டிய தேவை இருக்கிறது. அவர்கள் தாம் கவனம் செலுத்துவதில்லை என்பதனாலோ அல்லது அவர்களது உள்ளம் ஏதாவது பாவத்தின் காரணமாக இறைவனின் அருளை ஈர்ப்பதற்கு ஆயத்தமாக இருப்பதில்லை என்பதனாலோ புரிவதில்லை. இந்தக் கடினமான விஷயங்கள் பொதுவாக இருவகைப்படுகின்றன. ஒன்று, நுணுக்கமான தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட அறிவுசார்ந்த விஷயங்களாகும்.

எடுத்துக்காட்டாக, ஓரிறைக் கொள்கை இருக்கிறது. இறைவன் ஒருவன் என்றஅளவு அதன் பகுதியையோ ஒவ்வொருவரும் புரிய முடியும். ஆனால், எவ்வாறு மனிதனின் ஒவ்வொரு செயலிலும் இறைவனின் ஓரிறைமையின் தாக்கம் ஏற்படுகிறது என்ற இந்த மறைவான நுணுக்கங்களைப் புரிவதற்கு இறைவனை அடையாளம் காணும் ஒருவரின் தேவை ஏற்படும். இந்த விவகாரங்களை மற்றவர்களுக்குப் புரிய வைப்பதற்காக அறிஞர் ஒருவர் தேவைப்படுவார். ஒவ்வொருவராலும் இந்த நுணுக்கங்களைக் கண்டெடுக்க

முடியாது. ஆனால், திருக்குர்ஆன் மற்றோர் இறைவன் இருப்பதாகக் கூறவில்லை என்ற அளவு விஷயத்தைக் கண்டிப்பாகப் புரிந்து கொள்வார். இரண்டாவது, எத்தகைய பொருள்கள் குறித்து இந்த சிரமங்கள் உருவாகின்றன என்றால், அவை அறிவுசார்ந்தவையாக இருக்காதுதான்; ஆனால், ஒப்புமை அல்லது உவமை எனப்படும் மொழியில் அவை எடுத்துக் கூறப்பட்டிருக்கும். பொது மக்கள் அந்த மொழிமரபை அறியாததனால் அதற்கு எத்தகைய பொருளை எடுத்துக் கொள்கிறார்கள் என்றால், அது உண்மையை அடிப்படையாகக் கொண்டிருப்பதில்லை.

எடுத்துக்காட்டாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு நிகழ்வு நடந்தது. சிரியாவின் போரில் ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்கள் ஷஹீதானபோது, கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள், “ஜாஃபருக்காகவோ அழுபவர் எவரும் இல்லையே!” என்று கூறினார்கள். மாநபி (ஸல்) அவர்கள் கூறியதன் பொருள், மக்கள் போய் அழ வேண்டும் என்பதாக இருக்கவில்லை. மாறாக, எம் சகோதரரும் கொல்லப்பட்டார். நாம் பொறுமை காக்கிறோம் என்று இது துயரத்தை வெளிப்படுத்துவதற்கான ஓர் உவமையாக இருந்தது. ஆனால், அன்ஸாரிகள் இந்த சொற்றொடருக்கு சொற்பொருள் எடுத்துக் கொண்டு பெண்களை ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்களின் வீட்டுக்கு அனுப்பி வைத்து விட்டார்கள். அவர்கள் அங்கு அழுது புலம்பத் துவங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இது பற்றி தெரியவந்தபோது அன்னார், “நான் இந்தப் பொருளில் ஒன்றும் சொல்லவில்லையே” என்று கூறினார்கள். ஆக, ஒருவர் சென்று அவர்களைத் தடுத்தார். அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் திரும்பிவந்து, ‘அந்தப் பெண்கள் நான் சொல்வதைக் கேட்பதில்லை’ என்று பணிவுடன் கூறினார். எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், “அவர்கள் தலையில் மண்ணைப் போடுவீராக” என்று கூறினார்கள். அதாவது, அவர்களை விட்டுவிடுவீராக, அவர்களே அமைதியாகி விடுவார்கள் (என்று பொருள் ஆகும்). ஆனால், அவர் இந்த விஷயத்துக்கும் சொற்பொருள் எடுத்துக் கொண்டு, உண்மையிலேயே மண்ணைப் போடத் துவங்கி விட்டார். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், ‘நீ விஷயத்தைப் புரியவேயில்லை’ என்று அவரைத் திட்டினார்கள்.

அல்லாமா இப்னு கஸீர் அவர்களின் நூலான அல் பிதாயா வந்நிஹாயாவில் மூத்தா போர் ஷஹீதுகள் பற்றி கூறிய பிறகு, ‘அவர்களின் எண்ணிக்கை 12 ஆகும்’ என்று எழுதியுள்ளார்கள். சில அறிவிப்புகளில் ஷஹீதுகளின் எண்ணிக்கை அதிகமாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால், எவ்வாறு இருப்பினும், இது மிகப் பெரும் அற்புதம் ஆகும். அதாவது, இரண்டு படைகள் எதிரெதிரே இருக்கின்றன. ஒன்று இறைவழியில் சண்டையிடுகிறது. அதன் எண்ணிக்கை மூவாயிரமாக இருக்கிறது. அதே வேளையில், எதிரிப் படையான மற்றதின் எண்ணிக்கை 2 இலட்சமாக இருக்கிறது. ஒரு இலட்சம் பேர்

ரோமானியர்கள்; ஒரு இலட்சம் பேர் கிறிஸ்தவர்கள். அவர்கள் ஒருவர் மற்றவருடன் பெரும் போர் புரிகிறார்கள். பிறகும்கூட, முஸ்லிம்களின் 12 பேர் மட்டுமே அல்லது மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே மக்கள் ஷஹீதானார்கள். இணைவைப்பாளர்களின் பெரும் எண்ணிக்கை நரகத்துக்குச் சென்றது.

பிறகு, ஒரு படையெடுப்பு பற்றி கூறப்பட்டுள்ளது. இது ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் படையெடுப்பு எனப்படுகிறது. இந்தப் படையெடுப்பு ஜமாதிஸ் ஸானீ ஹிஜ்ரீ 8 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. இப்னு இஸ்ஹாக் அவர்கள் தவிர ஏனைய அனைவரும் இந்தப் படையெடுப்பு மூத்தா போருக்குப் பின் நிகழ்ந்தது என்பதில், கருத்தொருமிக்கிறார்கள். மூத்தா போர் ஜமாதில் ஊலா ஹிஜ்ரீ 8 ஆம் ஆண்டு நடந்தது. இந்தப் படையெடுப்புக்குக் காரணமாக அமைந்தது என்னவென்றால், பனூ குஸாஆவின் ஒரு குழு மதீனாவின் அக்கம்பக்கம் தாக்குதல் தொடுப்பதற்காக ஒன்று கூடுகிறது என்ற செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்தது.

இவர்களை வேரறுப்பதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களை அனுப்பினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவர்களின் தலைமையில் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகள் உள்ளடங்கிய 300 பேர் கொண்ட படையை ஆயத்தம் செய்தார்கள். அதில் 30 குதிரை வீரர்களும் இருந்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்களுக்காக ஒரு வெள்ளை நிறக்கொடியைக் கட்டினார்கள். அத்துடன் ஒரு கருப்பு நிறக்கொடியையும் வழங்கினார்கள். ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் போரில் சிறப்பு திறமை கொண்டிருந்தார்கள். போர் உத்திகளையும் அறிந்திருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இவர்களது போர்த்திறமைக் காரணமாக இவர்களை அமீராக்கியிருந்தார்கள்.

இஸ்லாமிய படை புறப்பட்டது. இது இரவில் பயணம் செய்யும். பகலில் ஒளிந்து கொள்ளும். எதுவரை என்றால், இது ஜுஸாம் கோத்திரத்தின் பகுதியான ஸலாஸில் எனப்படும் ஒரு நீரூற்றுக்கு அருகில் சென்று விட்டது. இதையொட்டி, இந்தப் படையெடுப்பு ஸாத்துஸ் ஸலாஸில் படையெடுப்பு என்றும் கூறப்படுகிறது. நீரூற்றுக்கு அருகில் சென்றடைந்ததும் எதிரிகளின் படை மிகப் பெரியது என்று முஸ்லிம்களுக்குத் தெரிய வந்தது. ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் மேற்கொண்டு உதவிக்காக ஹஸ்ரத் ராஃபி பின் மிக்யஸ் (ரலி) அவர்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களுக்காகக் கொடியை ஆயத்தம் செய்தார்கள். முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகளின் 200 பேர் கொண்ட படையை அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆகியோரும் அதில் இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களை

அனுப்பிவைக்கும்போது, “அங்கு சென்றடைந்ததும், ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்களுடன் இணைந்து கொள்ளுங்கள். ஒரே படையாக ஆகிவிடுங்கள். ஒருவர் மற்றவருடன் வேறுபாடு கொள்ளாதீர்கள்” என்றும் அறிவுரை கூறினார்கள்.

எவ்வாறாயினும், விவரத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: முஸ்லிம்கள் அங்கிருந்து புறப்பட்டார்கள். எதிரியின் பகுதியைச் சென்றடைந்து அதைத் தரைமட்டமாக்கினார்கள். அதன் மீது மேலோங்கி விட்டார்கள். எதுவரை என்றால், எந்த இடத்தில் எதிரிகள் ஒன்று கூடுவதாக அவர்களுக்கு செய்தி கிடைத்திருந்ததோ அந்த இடத்தை முஸ்லிம்கள் அடைந்ததும், எதிரிகள் முஸ்லிம்கள் வந்ததையறிந்து ஓடி விட்டார்கள்; சிதறிப்போய் விட்டார்கள். முஸ்லிம்கள் அவர்களைப் பின்தொடர்ந்தபோது, எதிரிகளின் ஒரு சிறு குழுவுடன் அவர்கள் மோதினார்கள். அவர்கள் அதன் மீது தாக்குதல் தொடுத்து அதைத் தோற்கடித்து விட்டார்கள். மற்றவர்களெல்லாம் ஓடிபோய் விட்டார்கள்.

பிறகு, ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் படையெடுப்பு இருக்கிறது. இந்தப் படையெடுப்பு ஹிஜ்ரீ 8 ஆம் ஆண்டு நடைபெற்றது. இந்தப் படையெடுப்புக்கு இதர பெயர்களும் உள்ளன. இந்தப் படையெடுப்பு சீஃபுல் பஹ்ர் படையெடுப்பு என்றும் கூறப்படுகிறது. சீஃபுல் பஹ்ர் என்றால், கடற்கரை என்று பொருள். இந்தப் படையெடுப்பில் சஹாபா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) செங்கடலின் கரையில் சென்று தங்கினார்கள். எனவேதான் இது சீஃபுல் பஹ்ர் படையெடுப்பு எனப்படுகிறது. இந்தப் படை ‘இலையை உண்ட படை’ என்றும் ஏன் கூறப்படுகிறது என்றால், இந்தப் படையெடுப்பின் போது, சஹாபா பெருமக்கள் (ரிஸ்) மரத்தின் இலைகளை உண்ணும் நிர்பந்தத்திற்கு ஆளான ஒரு நேரமும் வந்தது.

இந்தப் படையெடுப்பின் அமீராக ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவர்களை முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரி சஹாபிகளின் 300 பேர் கொண்ட ஒரு படையை வழங்கி பனூ ஜுஹைனாவின் ஒரு கிளைக் கோத்திரத்தின் பக்கம் அனுப்பினார்கள். இந்தப் படையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் இருந்தார்கள். பனூ ஜுஹைனா கபலியா எனும் இடத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

கபலியா மதீனாவிலிருந்து ஐந்து இரவுகள் பயணத் தொலைவில் கடற்கரைக்கு அருகில் இருந்த ஓர் இடமாகும். இந்தப் படையெடுப்புக்கான காரணமாக கூறப்படுவதாவது, மக்கத்து குறைஷியர்களின் ஒரு படை தானியங்களை எடுத்துக் கொண்டு கடற்கரையோரமாக சிரியாவிலிருந்து மக்காவுக்குச் சென்று கொண்டிருந்தது. அதன்மீது ஜுஹைனாவின் ஒரு கோத்திரத்தின் தரப்பிலிருந்து தாக்குதல் தொடுப்பதற்கான ஆபத்து இருந்தது. இது ஹுதைபிய்யா சமரச உடன்படிக்கை நிகழ்ந்த காலமாக இருந்தது.

ஜுஹைனா ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நட்புக் கோத்திரமாக இருந்தது. எனவே, நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டவாறு, சிரியாவிலிருந்து வரக்கூடிய குறைஷிய படையுடன் (அவர்கள்) மோதாமல் இருப்பதற்காகவும், குறைஷியர்களுக்கு 'அமைதி சீர்குலைந்து விட்டது; உடன்படிக்கை மீறப்பட்டு விட்டது' என்ற சாக்குபோக்கு கிடைத்து விடாதிருப்பதற்காகவும், முன்னெச்சரிக்கையாக ஒரு பாதுகாப்புப் படைக்குழுவை அவர்கள் பக்கம் அனுப்பி வைத்து விட்டார்கள். இதிலிருந்து இந்த சஹாபா (ரலியல்லாஹு அன்ஹும்) யாருடனும் சண்டையிடுவதற்காக செல்லவில்லை என்பது தெரியவருகிறது. ஆகவேதான், அவர்கள் 15 நாள்களுக்கு மேல் தங்கியிருந்த போதும், எந்தப் போரைப் பற்றிய குறிப்பும் கிடைப்பதில்லை.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் நடுவில் உள்ள போர் சூழல் குறித்து அதிகம் துஆ செய்யுங்கள். ஒருவர் மற்றவருடன் சமரசம் ஏற்பட்டு அமைதியின் சூழல் உருவாகட்டும். ஏனெனில், இன்றைய நாள்களில் போர்களில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களால் பொதுமக்களும் கொல்லப்படுவார்கள்; கொல்லப்படுகிறார்கள். இப்பொழுது போருக்கான புதிய சூழல் உருவாகிறது. எனவே, இரு சாராரும் சமரசத்திற்கு இணங்க வேண்டும்; பெரும் இழப்புகளில் இருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என துஆ செய்ய வேண்டும்.

இது தொடர்பாக இந்த விஷயத்தையும் நினைவில் கொள்ள வேண்டும்! இன்றைய நாள்களில் சமூக ஊடகங்களில், அல்லது இணையத்தின் வேறு வழிவகைகளான Electronic Media வோ எதுவோ, Message கள் இருக்கின்றன. அதில் ஒவ்வொருவரும் மிகவும் சுதந்திரமான முறையில் கருத்து தெரிவித்து விடுகிறார். தனது இஷ்டத்துக்கு என்னவேண்டுமானாலும் சொல்லிவிடுகிறார். அதனால் லாபம் குறைவு, நஷ்டம் அதிகமாகும். நாங்கள் என்ன விரும்புகிறோம் என்று தம் தரப்பிலிருந்து அதிகம் வெளிப்படுத்தப்படுவதுண்டு. அஹ்மதிகள் இதிலிருந்து விலகியிருக்க வேண்டும். ஏனென்றால், இந்த வெளிப்படுத்துதலுக்குப் பலன் குறைவு, இழப்பு அதிகமாகும். யாருக்காவது செய்தி தெரிவிப்பதற்கு அதிகம் ஆர்வம் இருந்தால், அமைதி மற்றும் சமாதானத்திற்கான தூதுச் செய்தியை வழங்கிடுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் தமது வாழ்வின் இறுதியில் இயற்றிய "பைஃகாமே சுல்ஹ் - சமாதான தூது" எனும் நூலில் இந்தத் தூதுச் செய்தியைத்தான் வழங்கினார்கள். அது அமைதி மற்றும் சமாதானத்திற்கான தூதுச் செய்தியாக இருந்தது. எனவே, அஹ்மதி ஒவ்வொருவரும் அதை நினைவில் கொள்ள வேண்டும். அதற்காகவே முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் குற்றமற்றவர்களின் உயிரிழப்புகள் ஏற்படுவதிலிருந்து அனைவரையும் காப்பாற்றுவானாக!

சில பெரிய ஆற்றல்கள் அதை ஊதிப் பெரிதாக்க முயற்சி செய்வதாகத் தெரிகிறது. அவர்கள், ‘இரண்டு ஆற்றல்களும் சண்டை போடட்டும்; வலுவிழந்து போகட்டும்; நம்முடைய ஆயுதங்களும் விற்பனையாகட்டும்’ என்று விரும்பின்றனர். அல்லாஹ் அவர்களது தீங்கிலிருந்தும் காப்பாற்றுவானாக!

இவ்வாறே பாலஸ்தீன மக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கும் எளிமைகளை ஏற்படுத்துவானாக. இவர்கள் நிம்மதியாகத் தமது நாட்டில் வாழ முடியட்டுமாக! ஆனால், வெளிப்படையில் பார்க்கும் போது, அமைதிக்கான எந்த சாத்தியக்கூறும் இல்லாதது போன்று தெரிகிறது. மாறாக, எப்படியாவது அவர்களை இங்கிருந்து வெளியேற்றிட வேண்டும் என்றே முயற்சி செய்யப்படுகிறது. அதில் எல்லா ஆற்றல்களும் இணைகின்றன. முஸ்லிம் நாடுகளுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக! அவர்கள் ஒன்றாகி விடுவார்களாக! அவர்கள் ஒன்றாகி விட்டால் பல பிரச்சனைகள் தீர முடியும்.

‘உலகப்போர் நடந்தால் நாம் தப்பித்துக் கொள்வோம்’ என்று சிலர், சில நாடுகள் நினைப்பது தவறான சிந்தனையாகும். இது அனைவரையும் தனது பிடியில் எடுத்துக் கொள்ளும். எனவே, இந்தத் தவறான புரிதலிருந்து ஒவ்வொருவரும் தப்பித்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ் அனைவரையும் பாதுகாப்பாக வைப்பானாக! எவ்வாறாயினும், நான் எப்பொழுதும் கூறி வருவது போன்று, இதற்கான ஒரே தீர்வு இறைவன் பக்கம் குனிவதேயாகும். அந்த ஒரு வழியே அவர்களைக் காப்பாற்ற முடியும். அதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. அல்லாஹ் அனைவருக்கும் அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)